4. கவன ஈர்ப்பு.

தர்மபுரி மாவட்டம், காவேரிப்பட்டினம் பகுதி பாசனக் கால்வாயில் கழிவு நீர் கலப்பது.

டாக்டர் கே. சமரசம் : தலைவர் அவர்களே, ''தர்மபுரி மாவட்டம், காவேரிப்பட்டினம் பகுதியில் பாசனக் கால்வாயில் கழிவு நீர் கலப்பதால் மக்கள் படும் இன்னல் குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, காவேரிப்பட்டினத்தில் ஓடும் பெண்ணையாற்றின் அருகே சுமார் மூன்று கிலோ மீட்டர் தூரத்திற்கு ஒரு பாசனக் கால்வாய் செல்கிறது. பொதுப்பணித் துறையினரால் இப்பாசனக் கால்வாய்க்கு சிமெண்டு கான்கிரீட் தடுப்புச் சுவர் கட்டப்பட்டுள்ளது. இச்சுவர் பாசன வாய்க்கால் நீர் ஆற்றில் கலக்காமல் தடுத்து வருகிறது.

தற்போது நான்கு இடங்களில் சாக்கடை நீர் பாசனக் கால்வாயில் கலக்கிறது. இந்தப் பாசனக் கால்வாயின் நீரை மக்கள் குளிக்கவோ, குடிக்கவோ, பயன்படுத்துவது இல்லை. ஆற்று நீரைக்கூட நேரிடையாகக் குடிக்க உபயோகப் படுத்தப்படவில்லை. நீரைச் சுத்திகரிப்பு செய்து குளோரைன் கலக்கப்பட்டு அந்த நீரைத்தான் அந்தப் பகுதி மக்கள் குடித்துக்கொண்டு இருக்கிறார்கள்.

அதிலே உள்ள முக்கியமான பிரச்சினை என்னவென்றால், குறுக்கே ஒரு பாலம் கட்ட வேண்டுமென்ற பிரச்சினையாகும். அந்தப் பாலம் கட்ட வேண்டுமென்று டெண்டர் கோரப்பட்டிருக்கிறது. உடனடியாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, சீக்கிரம் இந்தப் பாலம் கட்டி முடிக்கப்படும்.

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆறில்லா ஊரில் அழகு பாழ் என்பார்கள். ஆறு இருந்தும் அது கவனிக்கப்படாத காரணத்தினால் காவேரிப்பட்டின நகரத்தினுடைய அழகு பாழாக்கக்கூடிய நிலைமையிலே இருக்கிறது. அங்கே பாசனக் கால்வாய் 3 அடி, 4 அடி உயரம் கட்டியிருக்கிறார்கள்; அதிலே படிக்கட்டு இல்லை. ஆற்றிலே குளித்துவிட்டு வருகின்றவர்கள் சேற்றிலே கால் வைக்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. படிக்கட்டும் இல்லாத காரணத்தால் துணி மூட்டைகளையும் சுமந்து கொண்டு 3 அடி தூரம் உயர ஏறி, இறங்கி சேற்றிலே கால் வைக்க வேண்டிய நிலைமை பெண்களுக்கு வரும்போது, மிகவும் பரிதாபமாக இருக்கிறது. ஆகவே, காவேரிப்பட்டினத்தில் முக்கிய தெருவாக இருக்கிற பன்னீர்

செல்வம் தெரு, அப்பாசாமி நாயுடு தெரு என்று இருக்கக் கூடிய அந்தத் தெருக்களுக்கு நேராக அந்த ஆற்றை, கடக்கக் கூடிய இடத்தில் படிக்கட்டுகளைச் சரி செய்டவும் பாலங்களைக் கட்டுவதற்கு டெண்டர் விடப்பட்டிருப்பதாகவும் அமைச்சர் மூலம் அறிகிறேன். அதை வேகப்படுத்தி, விரைந்து செய்து அந்த மக்களைக் பாதுகாக்க ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-50)

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, சீக்கிரமாக வேகப்படுத்த ஆவன செய்யப்படும்

5. அரசினர் தீர்மானங்கள்.

(அ) விதி 30(3)-ன் கீழ் அலுவல் வரிசையில் மாற்றம்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவை விதி 30 (3)-ன் கீழ் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

'' இன்றைய நிகழ்ச்சி நிரலில் கண்டுள்ள எண் 3. அரசினர் சட்ட முன்வடிவுகள் என்கிற தலைப்பின்கீழ் 2-வதில் உள்ளதை முதலில் எடுத்துக் கொள்ள வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

6. அறிவிப்புகள்.

(அ) கேளிக்கை வரி—உள்ளாட்சி அதிகார மன்றங்கள் நிதி (திருத்த) சட்டமுன்வடிவு, 1984 (ஆ.இ.).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு: தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு கேளிக்கை வரி-உள்ளாட்சி அதிகார மன்றங்கள் நிதி (திருத்த) சட்டமுன்வடிவை அறிமுகம் செய்ய ஆளுநர், தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.